**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**I.A.1043/2015**

**in**

**O.S. No 8 /2015**

**வாக்குமூலம்: D.W–1 – வழக்கறிஞர் கணேஷன் (நீதிமன்ற ஆணையர்)**
**09.03.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**(எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையரை குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டதின் பேரில் கடந்த 11.02.2026 ஆம் தேதி நீதிமன்ற ஆணையர் அவர்களை எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை செய்தார். மனுதாரர் தரப்பிலும், நீதிமன்ற ஆணையர் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் மனுதாரர் நீதிமன்ற ஆணையரை குறுக்கு விசாரணை செய்ய இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகிறார்.)**

நான் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்து 8 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட வாரண்டில் 2 அயிட்ட சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்துக்களை மட்டும் அளந்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2 ஆம் அயிட்ட சொத்தினைப் பொறுத்து மனுதாரர்/வாதி தரப்பில் வழியுறுத்தவில்லை என்பதால் அளவீடு செய்யவில்லை. மனுச் சொத்துக்களை நான் 2 முறை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாரண்டில் குறிப்பிட்டுள்ள 1 ஆம் அயிட்ட சொத்துக்கள் முழுவதையும் அளவீடு செய்தேன் என்றால் சரிதான். நான் அளவீடு செய்யும் போது இரு தரப்பு வழக்கறிஞர்களும் உடன் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் அளவீடு செய்வதற்கு முன்பு எதிர்மனுதாரர் தரப்பில் (Memo of Instruction) குறிப்பாணை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. சர்வே எண்.107/6 ல் உள்ள சொத்துக்களை மீண்டும் அளவீடு செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை வழங்கப்பட்டது. சர்வே எண்.107/6 ல் மட்டும் தான் மறு அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மற்ற சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சட்டப்படி முறையாக தான் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.